இந்தித் திணிப்பு – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி – வேலை உறுதித் திட்டத்திற்கு நிதி வழங்காமை!

# பா.ஜ.க. போட்டியிடும் அனைத்துத் தொகுதிகளிலும் தோல்வி அடைவார்கள்!

## கரூரில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் – அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேச்சு!



கரூர், மார்ச். 29-

கரூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில், இந்தித் திணிப்பு, நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைத்திடும் ஒன்றிய அரசைக் கண்டித்து கரூர் பசுபதிபாளையம் உதயநிதி திடலில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெங்கமேடு எஸ். சக்திவேல் தலைமை வகிததார்.

மாநகர இளைஞரணி அமைப்பாளர் கராத்தே பி.பூபதி வரவேற்புரையாற்றினார். கரூர் மாவட்ட கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார். அவர் பேசியதாவது

தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரில் எம்.பி தொகுதி எண்ணிக்கையை குறைக்க பார்க்கிறது ஒன்றிய அரசு. உ.பி. போன்ற பாஜக ஆளும் மாநிலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க பார்க்கிறது. இந்தி பேசும் மாநிலங்களில் வெற்றி பெற்றால் போதும் ஆட்சி அமைப்பதற்கு என்கிற நிலையை உருவாக்க பார்க்கிறது. மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியை ஒன்றிய அரசு திணித்து இந்தி படித்தால் தான் வேலை என்று இனியும் ஏமாற்ற முடியாது. ஏனென்றால் தங்கள் சொந்த மாநிலங்களில் வேலை வாய்ப்பு இல்லாமல் தான் வட இந்திய தொழிலாளர்கள் தமிழ் நாட்டுக்கு வேலைக்கு வருகின்றனர். நிதி பகிர்வில் ஒன்றிய அரசு தமிழ் நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. இயற்கை சீற்றங்களின் போது கூட இரக்கமற்று இருக்கின்றார்கள். பேரிடர் நிதி முதல் அனைத்து வகையான நிதிகளையும் கொடுக்காமல், அதேசமயம் பாஜக ஆளும் மாநிலங்களுக்கு மட்டும் நிதியை அதிக அளவில் ஒதுக்குகிறார்கள். தமிழ் நாட்டில் இருந்து ஒரு ரூபாய் வசூலித்து விட்டு 29 பைசாவை நிதியாக திருப்பித் தந்து மக்களை வஞ்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். நீ நிதியை கொடுத்தால் என்ன?. கொடுக்காவிட்டால் என்ன?. வாக்களித்த மக்களை நான் காப்பாற்றுகிறேன் என அனைத்து சூழ்ச்சியையும் வீழ்த்தி நமது முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்கள் நல திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சிலபேர் இந்த அநீதிகளை எல்லாம் பார்த்தும் அமைதியாக இருக்கிறார்கள். சில பேர் சமரசம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆளுமைத்திறன் நெஞ்சுரம் மிக்க நமது முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தான் இந்த மூன்று நிலைகளிலும் எதிர்த்து உறுதியுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழக நிதி நிலை அறிக்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு திட்டத்தை அதாவது 20 லட்சம் மாணவ மாணவியருக்கு லேப்டாப் வழங்குவதற்காக 2000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. உள்ளங்கையிலேயே உலகத்தை வழங்குவதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் சிந்தித்து செயல்படுத்தும் திட்டம் இது.

கரூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், ஐடி பார்க் அமைக்க முதல்வர் மு. க.ஸ்டாலின் அவர்கள் அனுமதி வழங்கி உள்ளார்கள். புதிய சிப்காட் அமைப்பதற்கு 200 ஏக்கர் நிலம் தேவை என்கிற நிலையில் தற்போது 250 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. விரைவில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். 2021ம் ஆண்டே கரூர் மாவட்டத்திற்கு வேளாண் கல்லூரியை முதல் அவர்கள் வழங்கி தற்போது மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். கிராமப்புற மக்களும் உயர் கல்வியை பெற வேண்டும் என்ற நோக்கத்தில் அரவக்குறிச்சியில் அரசுகலைக் கல்லூரி அமைக்கப்பட்டிருக்கிறது.

யார் நமக்காக செயல்படுகிறார்கள், யார் நமக்கான திட்டங்களை கொண்டு வருகிறார்கள், யார் நமக்காக சிந்திக்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்து கொண்டு இருக்கிறார்கள். இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழ்நாட்டை மாற்றி வீரர்களை ஊக்கப்படுத்தும் வகையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகின்றார்கள். இங்கே அரவக்குறிச்சி தேர்தலில் ஒருவர் தோல்வி அடைந்தது குறித்து பேசினார்கள். அரவக்குறிச்சி மட்டுமல்ல இனிமேல் எந்த தொகுதியில் நின்றாலும் அவர்கள் வாங்குவது முட்டையாகத் தான் இருக்கும். இனி தேர்தல் களத்தைப் பற்றி அவர்கள் சிந்திக்கவே கூடாது. அந்த அளவிற்கு நமது அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நாமும் உறுதுணையாக இருந்து, கரூர் மாவட்டத்தில் நான்கு தொகுதிகளிலும் வென்றோம் அதிலும் கரூர் தொகுதியில் மிக மிக அதிக வாக்கு வித்தியாசத்தில் வென்றோம் என்கிற நிலையை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசினார்.

இதில் எழுத்தாளர் சூர்யா சேவியர், தலைமை கழக இளம் பேச்சாளர் சண்முகவள்ளி, எம்எல்ஏக்கள் பி ஆர். இளங்கோ, க. சிவகாமசுந்தரி, கழகநெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என் மணிராஜ், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி. விஜயகுமார், மாநகர கழக செயலாளர் எஸ்பி.கனகராஜ், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ. கனகராஜ், சிகே.ராஜா, ஆத்தூர் பாபு, எஸ்.யுவராஜ், ஜிவி.அருண்,

இளைஞர் அணி நிர்வாகிகள் பி. நித்யானந்த், எஸ். கார்த்திக், டி. சுபாஷ், எஸ் சுபாஷ், கருவை ராஜாராமன், பா.அசோக்குமார், காவியா ரமேஷ், ஜிம் பாலாஜி, புல்லட் பூபதி, பாகணேஷ்பாபு, கு.கனகராஜ், பா. பிரபு, ச. திருமூர்த்தி, கரூர் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பொருளாளர் பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப. ராஜகோபால், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம். துரைராஜ், சாலை சுப்பிரமணி, என் செல்வராஜ், பகுதி கழக செயலாளர் கரூர் கணேசன், க. சுப்பிரமணியன், கோல்ட் ஸ்பாட் ஆர்எஸ். ராஜா, ஆர்ஜோதிபாசு, விஜிஎஸ்.குமார்,

ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.பாஸ்கரன், பி முத்துக்குமாரசாமி, வி.கே. வேலுச்சாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் என்எஸ். ஆறுமுகம், வி .கருப்பண்ணன், விகேடி.ராஜ், கண்ணு, சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், மற்றும் பலர் கலந்துகொண்டனர். மத்திய கிழக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் ரா வெங்கடேஷ் ராஜா நன்றி உரை கூறினார் கரூர் சட்டமன்ற தொகுதி திமுக இளைஞரணி சார்பில் பொதுக் கூட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

# கும்பகோணம் புறவழிச் சாலை விரைந்து அமைத்திட வேண்டும்!

## சட்டப்பேரவையில் – க.அன்பழகன் கோரிக்கை!

சென்னை, மார்ச் 29 -

**சட்டப்பேரவையில் கும்பகோணம் சாக்கோட்டை க.அன்பழகன் கேட்ட கேள்வியும் அதற்கு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:**

**க.அன்பழகன்:** கும்பகோணம் மக்கள் சார்பில் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றையதினம், முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கும்பகோணத்திற்கு புதிய பேருந்து நிலையம் அமைத்துக் கொடுத்திருக்கிற முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.



1989 ஆம் ஆண்டு மாண்பிற்கினிய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களாலும் மாண்பிற்கினிய அண்ணன் கோ.சி. மணி அவர்களாலும் கும்பகோணத்திற்கு புறவழிச் சாலை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது மூன்று மகாமகம் முடியப் போகிறது. ஒரு மகாமகத்திற்கு 12 ஆண்டுகள். 36 ஆண்டுகளாகியும் பாதி தான் முடிந்திருக்கிறது. மீதமுள்ள பணிகள் இன்னும் முடிக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்று தாமதமாக நடைபெறுகின்ற இந்தப் பணியை உடனடியாக விரைந்து முடித்து, வரவிருக்கின்ற 28 ஆம் தேதி, 28 ஆம் ஆண்டு மகாமகம் வரவிருக்கிறது. அதற்குள் இந்த புறவழிச் சாலையை முடித்துக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் எ.வ.வேலு:** உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று, மகாமகம் 12 வருடங்களுக்கு ஒரு முறை வருவது உண்மைதான். அங்கு புறவழிச் சாலை அமைக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஏற்கெனவே, நேரடியாக நானும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்ற அடிப்படையில் நில எடுப்பு பணிகளெல்லாம் மேற்கொள்கின்றபோது இப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய அருமை அண்ணன் கல்யாணசுந்தரம் அவர்களும், சட்டமன்ற உறுப்பினரும் மீண்டும் alignmentஐ மாற்ற வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். அந்த அடிப்படையில், இப்போது alignment மாற்றப்பட்டு, நில எடுப்பு பணிகளுக்கு வேண்டிய பணிகள் முடுக்கி விடப்பட்டு, தற்போது நிதித் துறைக்கு கோப்புகள் சென்றிருக்கின்றன. நிதித் துறைமூலம் கோப்புகளுக்கு ஒப்புதல் பெற்று நில எடுப்பு பணிகளை இந்தாண்டே துவக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலக கூட்டரங்கில் புதிதாக அமைக்கும் தெருவிளக்கு மற்றும் இ.பி பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் சு.இராமமூர்த்தி முன்னிலையில் நடைபெற்றது. இதில் பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். உடன் துணை ஆணையாளர் சுந்தரராஜன், தலைமை பொறியாளர் (பொ) செல்வநாயகம் உள்பட மாநகராட்சி அலுவலர்கள் பலர் உள்ளனர்.

100 நாள் வேலை உறுதித் திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு தரவேண்டிய

ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய பா,ஜ.க. அரசைக் கண்டித்து

# மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒன்றியங்கள் தோறும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



100 நாள் வேலை உறுதித் திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் ஒன்றியங்கள் தோறும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தலைமைக் கழக அறிவுறுத்தல்படி மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒன்றியங்கள் தோறும் கீழ்கண்ட இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

அதன்படி கீழ்க்கண்ட இடங்களில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய , நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழகத்தினர் அதிக அளவில் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டத்தை வெற்றியடைய செய்ய வேண்டுகிறேன்.

| ஒன்றியம் | நடைபெறும் இடம் |
|---|---|
| மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் | நீடூர் அஞ்சல் அலுவலகம் முன் |
| மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியம் | பட்டமங்கலம் ஊராட்சி சீனிவாசபுரத்தில் ஐ.ஓ.பீ. வங்கி முன் |
| மயிலாடுதுறை மேற்கு ஒன்றியம் | த்தர்காடு கடை வீதியில் உள்ள எஸ்.பி.ஐ. வங்கி முன் |
| மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் | திருவாளப்புத்தூரில் அஞ்சல் அலுவலகம் முன் |
| செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியம் | பரசலூர் பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன் |
| செம்பனார்காயில் மத்திய ஒன்றியம் | திருக்கடையூர் அஞ்சல் அலுவலகம் முன் |
| செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியம் | திருக்களாச்சேரியில் ஐ.ஓ.பீ. வங்கி |
| குத்தாலம் வடக்கு ஒன்றியம் | தேரழுந்தூர் கடைத் தெரு |
| குத்தாலம் கிழக்கு ஒன்றியம் | மங்கைநல்லூர் கடைத்தெருவில் அஞ்சல் அலுவலகம் முன் |
| குத்தாலம் மேற்கு ஒன்றியம் | ஸ்ரீகண்டபுரம் கடைவீதி |
| கொள்ளிடம் கிழக்கு ஒன்றியம் | கடவாசல் அஞ்சல் அலுவலகம் முன் |
| கொள்ளிடம் மேற்கு ஒன்றியம் | திருவெண்காடு எஸ்.பி.ஐ. வங்கி முன் |
| சீர்காழி கிழக்கு ஒன்றியம் | திருவெண்காடு எஸ்.பி.ஐ. வங்கி முன் |
| சீர்காழி மேற்கு ஒன்றியம் | வைத்தீஸ்வரன்கோயில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முன் |

குறிப்பு ஆர்ப்பாட்ட ஏற்பாடுகளை ஒன்றிய கழகச் செயலாளர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திட வேண்டும்

**நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ**

செயலாளர், மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.

100 நாள் வேலை உறுதித்திட்டத்திற்கு நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசைக் கண்டித்து,

# திருப்பத்தூர் மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-

100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து அனைத்து ஒன்றியங்களிலும் இன்று (29.3.2025 சனிக்கிழமை) "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்"நடத்தப்பட வேண்டும் என்று தலைமைக் கழகம் அறிவித்துள்ளது. திருப்பத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து கழக ஒன்றியங்களிலும் கீழ்க்கண்டவாறு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

| ஒன்றியத்தின் பெயர் | ஆர்ப்பாட்டம் ஒருங்கிணைப்பாளர்கள் | ஊராட்சி |
|---|---|---|
| திருப்பத்தூர் மேற்கு | அ.நல்லதம்பி MLA திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் | மாடப்பள்ளி |
| | டி.கே.மோகன் மா.துணை செயலாளர் | ஜம்மணப்புதூர் |
| மாதனூர் மேற்கு | அ.செ.வில்வநாதன் MLA ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் | கதவாளம் |
| | ஆர்.எஸ்.ஆனந்தன் மா. அவைத் தலைவர் | மேல்சாணாங்குப்பம் |
| நாட்றம்பள்ளி மேற்கு | என்.கே.ஆர்.சூரியகுமார் ஒன்றிய செயலாளர் | ஆத்தூர்குப்பம் |
| | ஆ.சம்பத்குமார் மா.துணை செயலாளர் கோவிந்தராஜ் மா.பிரதிநிதி | பச்சூர் |
| குடியாத்தம் வடகிழக்கு | ப.ச.சுரேஷ்குமார் ஒன்றிய செயலாளர் | அகரம்சேரி |
| ஜோலார்பேட்டை கிழக்கு | க.உமாகன்ரங்கம் ஒன்றிய செயலாளர் | மண்டலவாடி |
| | எஸ்.கோபிநாதன் ஒ.அவைத்தலைவர் | காவேரிப்பட்டு |
| ஜோலார்பேட்டை மேற்கு | கே.சதீஷ்குமார் ஒன்றிய செயலாளர் | புதுப்பேட்டை |
| | சத்தியநாராயணன் பொதுக்குழு உறுப்பினர் | வேட்டப்பட்டு |
| திருப்பத்தூர் கிழக்கு | கே.ஆர்.திருப்பதி ஒன்றிய செயலாளர் | குரிசிலாப்பட்டு |
| ஆலங்காயம் கிழக்கு | எஸ்.தாமோதிரன் ஒன்றிய செயலாளர் | நிம்மியம்பட்டு |
| | தே.பிரபாகரன் மா.மாணவர் அணி அமைப்பாளர் | வளையாம்பட்டு |
| ஆலங்காயம் மேற்கு | வி.எஸ்.ஞானவேலன் ஒன்றிய செயலாளர் | மதனாஞ்சேரி |
| | மு.அசோகன் த.செயற்குழு உறுப்பினர் வி.ஜி.அன்பு மா.பிரதிநிதி | தேவஸ்தானம் |
| கந்திலி மத்தியம் | கே.ஏ.குணசேகரன் ஒன்றிய செயலாளர் | நத்தம் |
| | சு.அரசு பொதுக்குழு உறுப்பினர் டி.ஆர்வில் மா.பிரதிநிதி | கொரட்டி |
| கந்திலி மேற்கு | கே.முருகேசன் ஒன்றிய செயலாளர் | காக்கங்கரை |
| | ஆனந்தன் ஒ.அவைத்தலைவர் சி.கே.சுப்பிரமணி மா.பிரதிநிதி | கும்மிடிகாம்பட்டி |
| ஜோலார்பேட்டை மத்தியம் | கவிதா தண்டபாணி ஒன்றிய செயலாளர் | சின்னமூக்கனூர் |
| | கே.பி.ஆர்.ஜோதிராஜன் மா.பொருளாளர் திருமலை ஒ. து.செயலாளர் | ஒட்டப்பட்டி |
| நாட்றம்பள்ளி கிழக்கு | டி.சாமுடி ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி மா.பிரதிநிதி | மல்லகுண்டா |
| | எம்.சிங்காரவேலன் மா.சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் | திம்மாம்பேட்டை |
| கந்திலி தெற்கு | டி.அசோக்குமார் ஒன்றிய செயலாளர் | கந்திலி |
| | வி.வடிவேல் மா.இளைஞர் அணி அமைப்பாளர் சந்திரசேகர் ஒ.அவைத்தலைவர் பிரபாகரன் மா.பிரதிநிதி | அச்சமங்கலம் |
| கந்திலி கிழக்கு | அ.மோகன்ராஜ் ஒன்றிய பொறுப்பாளர் | விசமங்கலம் |
| | டி.ரகுநாத் பொதுக்குழு உறுப்பினர் தணிகாசலம் மா.பிரதிநிதி | மட்றப்பள்ளி |
| மாதனூர் கிழக்கு | க.இராமமூர்த்தி ஒன்றிய பொறுப்பாளர் | பெரியாங்குப்பம் |
| | சாமுவேல் செல்லபாண்டியன் த.செயற்குழு உறுப்பினர் ஜெ.ரவிக்குமார் மா.பிரதிநிதி | மாதனூர் |
| அணைக்கட்டு தெற்கு | த.முரளி ஒன்றிய பொறுப்பாளர் | அகரம் |
| | கோவிந்தன் ஒ. பொருளாளர் அரி ஒ.துணை செயலாளர் | ஆசனாம்பட்டு |

**க.தேவராஜி எம்.எல்.ஏ.**

செயலாளர்

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க.